# பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபை

## கண்டி மாவட்டம

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 09 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 07 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 யூலை 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் காணப்படும் கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபைக்குரிய 80 காணி மற்றும் கட்டிடங்கள், 94 மயான நிலங்கள் மற்றும் 90 சனசமூக மண்டபங்கள் மற்றும் 2006 ஆண்டின் போது சமூக நீர்த்திட்டத்தின் கீழ் நன்கொடையாகக் கிடைத்த 02 மோட்டார் சைக்கிள்கள் என்வற்றின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1267 இருப்பு விடயங்களின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 03 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 12,599,785 ஆக இருந்ததுடன் அதற்குரிய

துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,966,613 ஆக இருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### (அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 4,476,777 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,249,230 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,259,546 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் வழங்கப்பட்ட தினத்திலிருந்து 06 மாதங்களைக் கடந்திருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 23,731 பெறுமதியான 08 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,506 | 2,103 | 5,598 |
| (ii) | வாடகை | 2,558 | 2,293 | 2,445 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,216 | 2,007 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 22,618 | 30,044 | 4,892 |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,259,078 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 22,140,815 |

### 2.3.3 கடை வாடகை

தெல்தொட்ட நகரில் சபைக்குரிய 17 கடைகளை வாடகைக்கு வழங்கும் போது வாடகையாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் 55 கடைகளுக்குரிய நிலுவை கடை வாடகைப் பணம் ரூபா 150,073 ஆக

இருந்தது. 03 தலாத்து ஓயா பொதுச் சந்தை கடைகளில் ரூபா 215,412 தொகையான கடை வாடகைப் பணம் மீளாய்வாண்டில் நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.3.4 விளம்பரப் பதாதை வருமானம்

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 122(1) மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் 92 வியாபார நிறுவனங்களுக்குரிய விளம்பர பதாதைக்காக வாடகை அறவிடப்படாமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 272,725 தொகையினை சபை இழந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டில் 02 காணி ஏல விற்பனைக்காக காட்சிப்படுத்தப்பட்ட 30 பதாதைகளுக்காக ரூபா 10,125 தொகையான வாடகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) விளம்பர பதாதைகள் வாடகையாக அறவிட வேண்டியிருந்த தொகையினை விட ரூபா 7,312 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தன.

### 2.3.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 149, 151 மற்றும் 152 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2011 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் 30 வியாபாரங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் வழங்கப்படாமையின் காரணமாக ரூபா 30,000 தொகையான அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் இழக்கப்பட்டிருந்ததுடன் அனுமதிப் பத்திரம் பெறாத வியாபாரங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருமானத்தை அறவிடுவதற்கான சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 காணி விற்பனை வரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் மற்றும் 1996 ஆகஸ்ட் 16 அந் திகதிய 935/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 14 காணித் துண்டுகள் விற்பனை விலை அறிக்கை கோரப்பட்டு அதன் பிரகாரம் 1% வரித்தொகை

அறவிடப்படாதிருந்ததுடன் ஏனைய 02 காணித்துண்டுகளில் 1% வரித்தொகை அறவீடு செய்யும் போது ரூபா 459,339 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.7 தொலைத் தொடர்பு பரிவர்த்தனை கோபுர அனுமதிப்பத்திரக் கட்டணம்

2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரங்களின் உயரம் 5 – 20 மீற்றர் வரை ரூபா 20,000 தொகையும், அதற்கு மேற்படுகின்ற ஒவ்வொரு மீற்றருக்கும் ரூபா 100 படியும் கட்டணம் அறவிட வேண்டிய போதிலும் 17 தொலைத்தொடர்பு பரிவர்த்தனைக் கோபுரங்களுக்காக ரூபா 350,000 தொகையான கட்டணம் அறவிடப்படாதிருந்ததுடன் கோபுரங்களின் மூலம் ஊடாக வசதிகள் வழங்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படாமையின் காரணமாக ரூபா 800,000 தொகையை சபை இழந்திருந்தது.

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

06 பௌதீக வள விடயங்கள் செயற்பாடற்று மற்றும் குறைவான பயன்பாடுடையதாகக் காணப்பட்டமை கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு அறவிடவேண்டியிருந்த ஏதாவது நிதி அளவுகளைப் பதிவழித்தல் உள்ளூராட்சி விடய பொறுப்பு அமைச்சரின் அங்கிகாரத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி ரூபா 447,879 தொகையான பெறவேண்டிய பணம் மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

வெல்தம்பல குடிநீர் உத்தேசத் திட்டத்திற்காக 2006 ஆம் ஆண்டின் போது ரூபா 110,000 தொகை செலவிடப்பட்டு 103 பீ.வீ.சீ நீர்க் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 வரையிலும் உத்தேசத் திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாடு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) களஞ்சியத்தில் ரூபா 1,500,000 இற்கு மேல் பெறுமதியுடைய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் காணப்பட்ட போதும் களஞ்சியப் பொறுப்பாளராக முகாமைத்துவ சேவையின் உத்தியோகத்தர்கன் நியமிக்கப்படாமல் அதற்காக அலுவலக உதவியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

(ஆ) விநியோகிக்கும் கட்டளையினால் விநியோகிக்கப்பட்ட பொருட்கள் இருப்புப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டிராததுடன் பொருள் கொள்வனவு மற்றும் விநியோகித்தல் என்பன உரிய பிரகாரம் இருப்புப் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 154 ஆம் பிரிவு மற்றும் 1996 ஆகஸ்ட் 16 அந் திகதிய 935/6 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளுக்கு முரணாக தென்னேஹேன மடித்த காணி முறையான அங்கீகாரமின்றி கூறுகளாக்கப்பட்டு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

(ஈ) மொரகொல்ல சபை வளவில் காணப்பட்ட ரூபா 456,575 பெறமதியான 02 டர்பன்டய்ன் மரங்கள் மற்றும் 02 பைனஸ் மரங்கள் என்பன வெட்டப்பட்டு 2012 யூன் 22 ஆந் திகதி வரையில் 03 வருடங்கள் மட்டில் கடந்திருந்த போதிலும் எவ்வித பயன்பாட்டிற்கும் எக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கலஹ ஆட்டிறைச்சிக் கடையின் நிலுவை மின்சாரப் பட்டியல் ரூபா 10,270 தொகையினை வாடகையாளரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.